1993 அக்டோபர் 28]

மூலமும் அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்து, அதை இங்கேயே வாங்கி, இங்கேயே நூற்று நெய்கிற அளவுக்கு அதைக் கொண்டுவரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 50, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண். 51, டாக்டர் ஜெ. பரந்தாமன் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

51—

ஒன்றியங்களை தொழில்துறையில் முன்னேற்றும் திட்டம்.

*9568—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கும் வட்டங்களுக்கு (Taluk) மாறாக ஒன்றியங்களை (Panchayat Union) அறிவித்து, ஒன்றியங்களை தொழில் துறையில் முன்னேற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இந்த வினாவிற்கு விடையளிப்பதற்கு முன், தங்களுடைய முன் அனுமதியோடு எனது உணர்வுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதுகாறும் வினா தொடுக்கும் இடத்திலே இருந்த என்னை, விடையளிக்கும் இடத்திற்கு உயர்த்தி, தமிழக அரசியல் வரலாற்றில் உயர்ந்த இடத்திலேயிருந்து நிறைந்த ஆட்சியைத் தந்து கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பிலேயும், என் தொகுதி மக்கள் சார்பிலேயும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை காணிக்கையாக்கி, வினாவிற்கு விடையளிக்கிறேன்.

இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் புரட்சியில், தொழில் அமைதியில், தொழிலாளர் முன்னேற்றத்தில், இந்தியாவைத் தாண்டி உலக நாடுகளின் முன்னேற்றத்திற்கு இணையாக ஜெயங்கொண்டம் மின் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்

களை, (Unique and Pilot Plans) களை நிறைவேற்றும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அம்மா அவர்களால் புதிய தொழில் அமைச்சராகத் தாங்கள் தொழில் துறையை ஏற்றுள்ள அமைச்சர் என்ற வகையில், உங்கள் முதல் பதில் என்பதால், 'ஆம்' என்று சொல்வீர்கள் என்ற நம்பிக்கையோடு இருந்தேன். வட்டம் என்று வருகிறபோது 3, 4 தொகுதிகள் சலுகை பெறுகிற, முன்னேறுகிற அதே நேரத்தில் வேறு வட்டத்தில், 3, 4 தொகுதிகள், மலைக்கும் மடுவுக்கும், பாலைக்கும், சோலைக்கும், கருப்புக்கும் வெள்ளைக்கும் உள்ளதைப் போன்ற பின்னடைவும் பாதிப்பும் உள்ள நிலை இருப்பதால், ஒன்றியம் என்று வரும்போது வெற்றி, முன்னேற்றம் குறிப்பிட்ட தொகுதியில் ஒருமுகப்படுத்தப்படுவதால் ஏற்படும். எனவே ஒன்றியங்களைத் தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவித்து முன்னேறச் செய்ய அரசு கருணையுடன் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொல் வளத்தை நான் பாராட்டியாகவேண்டும். ஏற்கனவே மத்திய அரசு, மாவட்ட அளவிலே பின்தங்கிய பகுதிகளுக்கு என்று சலுகைகளை அளித்து வந்தது. 1988-ஆம் ஆண்டு அந்தச் சலுகைகளை மத்திய அரசு நிறுத்திவிட்டது. அதற்குப் பிறகு மாநில அரசு 1989ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் 113 வட்டங்களைப் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவித்து, தொழில், வளர்ச்சிக்கு என்று பல்வேறு சலுகைகளை அளித்து வருகிற காரணத்தால், ஒன்றிய அளவிலே பின்தங்கிய ஒன்றியங்கள் என்று அறிவிப்பதற்கு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தாலே அதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதிக்கு 3, 4 ஒன்றியங்கள் அடங்கலாம். தமிழகம் முழுமையையும் முன்னேற்றும், 234 தொகுதிகளையும் தன் சொந்தத் தொகுதிகளாக சாதி, மதம், பொருளாதாரம், கட்சி என்ற எந்தப் பாகுபாடும் காட்டாத நம் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் வாய்ப்பு வரும்போது ஒரு தொகுதிக்குக் குறைந்தது இரண்டு ஒன்றியங்களாவது பிற்பட்ட சலுகை அளிக்கின்ற அளவிற்கு அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டங்கள் என்று 113 வட்டங்கள் அறிய வித்து இருக்கிறோம். அதில் மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு அந்த வட்டத்தில் இருக்கிற ஜனத் தொகையில் தொழிலாளர்கள் எண்ணிக்கை 0.25 சதவீதத்திற்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும். நடுத்தர மற்றும் பெரிய தொழில்களில் முதலீடு எதுவும் இருக்கக் கூடாது. அதேபோல் பின்தங்கிய வட்டங்களில் அந்த வட்டத்தினுடைய ஜனத் தொகையில் தொழிலாளர்கள் எண்ணிக்கை 2 சதவீதத்திற்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும். நடுத்தர மற்றும் பெரிய தொழில்களினுடைய முதலீடு ரூபாய் 15 கோடிக்கு மேல் மிகாமல் இருந்தால் அவற்றைப் பின்தங்கிய வட்டம் என்று அறிவித்து பல்வேறு சலுகைகளை அரசு கொடுத்து வருகிறது. ஆகவே, இந்த சலுகைகளைப் பயன்படுத்தித் தொழில்கள் நிறைவடைகின்றபோது, இந்த இலட்சியத்தில் நாம் வெற்றி பெற்ற பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியைப் பின்னர் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் மு. சீனியம்மாள்:

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேதான் தமிழகம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு இந்தியாவையே தமிழகத்திற்குக் கொண்டு வந்துவிட்டு தொழில் புரட்சியை ஏற்படுத்தி இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அவினாசி தொகுதியை பிற்பட்ட தொகுதியாக ஆக்கியதற்காக என் தொகுதி சார்பாக நன்றி செலுத்துவதோடு, அந்தத் தொகுதியிலே திருப்பூர் பக்கத்திலே இருந்தாலும்கூட, தொழில்கள் இன்னும் அபிவிருத்தி அடையாமல் பின்தங்கியதாகவே இருக்கின்றது. எனவே, மாண்புமிகு கருணை உள்ளம் கொண்ட தெய்வத்தாய் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தொழில் அதிபர்களைக் கணக்கில் எடுத்து எங்கள் தொகுதியை தொழிலில் விருத்தி அடையச் செய்யுமாறு உதவி செய்ய அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புதிய தொழில் கொள்கையை அறிமுகப்படுத்தி ஒரு தொழிற்புரட்சி இயக்கத்தையே உருவாக்கி வெளிநாட்டுத் தொழில் முனைவர்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே வந்து தொழில் தொடங்க வேண்டும் என்கிற சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தி இருக்கிற "தொழிற் புரட்சித் தலைவர்" ஆக விளங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய

மாண்புமிகு முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைய தொழில் அதிபர்களை அழைத்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென்று எனக்கு ஆணையிட்டு இருக்கிறார்கள். அப்படி வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் சீனியம்மாளுடைய கோரிக்கையை கவனத்திலே எடுத்துக்கொண்டு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 52, திரு. ம. தனபால், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

52—

சத்துணவு அமைப்பாளர் பணிக்கு வயது வரம்பை தளர்த்துதல்.

*19333—திரு. ம. தனபால்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் பணியில் சேருவதற்கான குறைந்தபட்ச வயது வரம்பிற்கும் மற்ற பணியிடத்திற்கான வயது வரம்பிற்கும் வித்தியாசம் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குறைந்தபட்ச வயது வரம்பை தளர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) வயது வரம்பைத் தளர்த்துவதற்கு அரசு முன்வராது.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் பணிக்கான வயது வரம்பு குறைந்தபட்சம் 26 இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அதேபோன்று சத்துணவு அமைப்பாளர் பணிக்கு 18 வயது என்று இருக்கிறது என்று நினைக்கிறேன். இதிலே ஒரு வித்தியாசம் இருப்பது மட்டுமல்லாமல் பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் என்று சொல்கின்றபோது அதற்கு 26 வயது முடிந்தால்தான் அந்தப் பணியிலே சேர முடியும் என்று இருப்பதால், அதிலும் இன்னொரு பெண்தான் அப்பணிக்குச் சேரத் தகுதி